**ஏப்ரல் – 19**

# TNPSC துளிகள்

- ஜம்மு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையைச் சேர்ந்த உயர் ஆற்றல் குறித்த இயற்பியல் குழுவானது, அடிப்படை இயற்பியலில், "அறிவியலின் ஆஸ்கார் விருதுகள்" என்று குறிப்பிடப் படுகின்ற 2025 ஆம் ஆண்டு திருப்புமுனைப் பரிசு வழங்கப்பட்ட சர்வதேசக் குழுவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- டஸ்ட்லிக் எனப்படுகின்ற இந்தியா-உஸ்பெகிஸ்தான் இடையிலான ஆறாவது கூட்டு ராணுவப் பயிற்சியானது புனேவில் தொடங்கியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உள்ளாட்சி அமைப்புகளில் PwD இடஒதுக்கீடு




- தமிழ்நாட்டின் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் என மாற்றுத் திறனாளிகளை நியமிப்பது குறித்த இரண்டு மசோதாக்களை முதல்வர் ஸ்டாலின் அறிமுகப்படுத்தி உள்ளார்.
- நகராட்சி நிர்வாகத் துறை சார்பாக ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தினைத் திருத்தி அமைப்பதன் மூலம் மாநிலத்தின் அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சிக் கழகங்களில் மாற்றுத் திறனாளிகளை நியமிப்பதற்கான இந்த மாநில அரசின் முடிவை நடைமுறைப்படுத்த இந்த மசோதா முயல்கிறது.
- கிராமப்புற மேம்பாட்டுத் துறை சார்பாக மற்றொரு மசோதா அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளது.
- 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டத்தினைத் திருத்தியமைப்பதன் மூலம், அனைத்து கிராமப் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றியச் சபைகள் மற்றும் மாவட்டப் பஞ்சாயத்துகளிலும் ஒரு மாற்றுத் திறனாளியை நியமிக்க வகை செய்யும்

மாநில அரசாங்கத்தின் முடிவைச் செயல்படுத்த இது முயன்றது.

- ❖ தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 35 மாற்றுத் திறனாளிகள் மட்டுமே உள்ளனர்.
- ❖ இந்த மசோதாக்கள் இயற்றப்பட்டவுடன், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 650 மாற்றுத் திறனாளிகள், கிராமப் பஞ்சாயத்துகளில் 12,913 மாற்றுத் திறனாளிகள், பஞ்சாயத்து ஒன்றியங்களில் 388 மாற்றுத்திறனாளிகள், மாவட்ட பஞ்சாயத்துகளில் 37 மாற்றுத்திறனாளிகள் நியமிக்கப்படுவார்கள்.
- ❖ மாநகராட்சிக் கழகத்தில் ஒரு மாற்றுத் திறனாளி நபர் இம்மாநில அரசாங்கத்தினால் அதன் உறுப்பினராக நியமிக்கப்படுவார்.
- ❖ 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நகராட்சி மன்றத்தில் /சபையில், இரண்டு மாற்றுத் திறனாளிகள் (PwDs) இயக்குநரால் பரிந்துரைக்கப்படுவார்கள்.
- ❖ அவ்வாறு பரிந்துரைக்கப் பட்டவர்களின் பதவிக்காலம் அந்தந்தச் சபையின் பதவிக் காலத்துடன் ஒத்திருக்கும்.
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற மதிப்பு, கட்டணம் அல்லது கொடுப்பனவுகளைப் பெற அவர்களுக்கு உரிமை உண்டு.
- ❖ இருப்பினும், தேர்ந்தெடுக்கப் பட்ட அச்சபை கலைக்கப்பட்டால் அத்துடன் அவர்களின் பிரதிநிதித்துவமும் முடிவடையும்.
- ❖ குறிப்பிடத் தக்க வகையில், எந்தவொரு சபை நடவடிக்கைகளிலும் பரிந்துரைக்கப் பட்டவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்காது.
- ❖ இந்த மசோதாக்கள் என்பவை 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கையின் கொள்கைகளுடன் ஒத்துப் போகின்றன.

# தேசியச் செய்திகள்

## இந்திய நீதி அறிக்கை 2025

- ❖ நான்காவது இந்திய நீதி அறிக்கையின்படி, இந்தியாவின் 5 தென் மாநிலங்கள் காவல், நீதி வழங்கல் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றில் மிகவும் வெகு சிறப்பாகச் செயல்படுகின்றன.
- ❖ பெரிய மற்றும் நடுத்தர மாநிலங்கள் பிரிவில் அனைத்து முன்னணி இடங்களையும் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா மற்றும் தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்கள் பெற்றுள்ளன.
- ❖ மேற்கு வங்காளம் ஆனது இப்பட்டியலில் கடைசி இடங்களிலும், அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம், உத்தரக்காண்ட், ஜார்க்கண்ட் மற்றும் இராஜஸ்தான் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.
- ❖ ஏழு சிறிய மாநிலங்களில், சிக்கிம் சிறப்பான செயல் திறனுடனும், கோவா பின்தங்கிய நிலையிலும் உள்ளன.
- ❖ நீதியின் நான்கு தூண்களான காவல்துறை, சிறைச்சாலைகள், நீதித்துறை மற்றும் சட்ட உதவி ஆகியவற்றில் இந்த மாநிலங்களின் ஒரு செயல்திறன் ஆனது இந்தத் தர வரிசைக்கான காரணிகளாகக் கருத்தில் கொள்ளப் பட்டன.
- ❖ குற்றங்களை எதிர்த்துப் போராடுவதிலும் நீதி வழங்குவதிலும் மாநிலங்கள் முன்னேறி வரும் அல்லது பின்தங்கிய பகுதிகளை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- ❖ தேசிய அளவில், காவல்துறை-மக்கள்தொகை விகிதம் ஆனது 100,000 பேருக்கு 155

காவல்துறையினர் என்ற அளவில் மிகவும் தேக்க நிலையில் உள்ளது என்பதோடு இது அனுமதிக்கப்பட்ட 197.5 என்ற எண்ணிக்கையினை விடக் கணிசமாகக் குறைவு ஆகும்.

- பீகார் மாநிலத்தில் ஒரு லட்சம் பேருக்கு 81 காவல்துறையினர் மட்டுமே என்ற அளவு விகிதத்தில் மிக மோசமான காவல்துறை-மக்கள்தொகை விகிதம் உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின் கடைசிப் பதிப்பிலிருந்து, சட்ட உதவி வழங்குதல் பிரிவில் ஹரியானா மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது.
- கடந்த ஒரு பத்தாண்டுகளில், சிறைச் சாலைகளின் உள்ள கைதிகளின் எண்ணிக்கை சுமார் 50% அதிகரித்துள்ளது.
- டாடா அறக்கட்டளையின் கீழ் தொடங்கப்பட்ட இந்திய நீதி அறிக்கையானது, 2019 ஆம் ஆண்டில் அதன் முதல் அறிக்கையை வெளியிட்டது.




## அடுத்த இந்தியத் தலைமை நீதிபதி – B.R. கவாய்




- இந்தியத் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா, நீதிபதி B.R. கவாயை இந்தியாவின் 52வது தலைமை நீதிபதியாக நியமிக்க அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

- இந்தியத் தலைமையான நீதிபதி சஞ்சீவ் கண்ணா மே 13 ஆம் தேதியன்று ஓய்வு பெற உள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு மே 24 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற இவர் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் தேதியன்று ஓய்வு பெற உள்ளார்.
- கவாயின் தந்தையான 'தாதாசாகேப்' என்று அறியப்பட்ட இராமகிருஷ்ணா சூர்யபன் கவாய், பீகாரின் முன்னாள் ஆளுநராக இருந்தார்.
- இந்தியத் தலைமை நீதிபதியான KG பாலகிருஷ்ணன் (2007-2010) என்பவருக்கு அடுத்து பட்டியலினச் சமூகத்திலிருந்து இந்தியாவின் இரண்டாவதுதலைமை நீதிபதியாக நீதி அரசர் BR கவாய் பதவி ஏற்க உள்ளார்.

## சக்ரா V நடவடிக்கை




- 'எண்ணிம ரீதியான குற்றப் பதிவு என்ற தவறான தகவல்கள்' மூலமான சில பண மோசடிகளில் கடுமையாக ஈடுபட்டதாகக் கூறி மும்பை மற்றும் மொராதாபாத்தில் (உத்தரப் பிரதேசம்) தலா இரண்டு பேர் என நான்கு பேரை மத்தியப் புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.
- 'சக்ரா V' என்ற நடவடிக்கையின் ஒரு பகுதியாக சுமார் 12 இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளைத் தொடர்ந்து இந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.
- இந்த மோசடியில், மோசடி செய்பவர்கள், இந்திய ரிசர்வ் வங்கி போன்ற பல்வேறு சட்ட அமலாக்க மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களின் அதிகாரிகள் என்று தங்களைக் காட்டிக் கொண்டு, சாத்தியமான இலக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட சில நபர்களுக்கு தொலைபேசி /ஒளிப்படக் காட்சி அழைப்புகளை மேற்கொள்வர்.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவின் அருமண் தனிம ஏற்றுமதி

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சுங்க வரிகளை விதிக்க முடிவு செய்த சிறிது

நேரத்திலேயே, ஏப்ரல் 04 ஆம் தேதியன்று சீனா ஏழு "அருமண்" தாதுக்களின் மீதான ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை அறிவித்தது.

- பாதுகாப்பு மற்றும் தூய்மையான எரிசக்தித் துறைகள் உள்ளிட்ட அதிக மதிப்புள்ளப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு இந்தத் தாதுக்கள் மிக முக்கியமானவையாகும்.
- 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து, உலகின் தேவையில் சுமார் 85 முதல் 95 சதவீதம் வரை வழங்குவதன் மூலம் சீனா அருமண் தாதுக்கள் உற்பத்தியில் மிகவும் நிகரற்றப் பெரும் முன்னணித்துவத்தினைக் கொண்டுள்ளது.
- அருமண் தாதுக்கள் அல்லது அருமண் உலோகங்கள் தனிம வரிசை அட்டவணையில் உள்ள 17 வேதியியல் தனிமங்களின் தொகுப்பாகும்.
- அருமண் ஆக்சைடு தாதுக்கள் என்பவை சீனா, ரஷ்யா, அமெரிக்கா, இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவில் (இறங்கு வரிசையில்) காணப்படுகின்றன.
- ஆனால் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு ஆகியவற்றில் சீனா மற்ற நாடுகளை விட ஒரு முன்னணியில் உள்ளது.
- சர்வதேச எரிசக்தி முகமை (IEA) ஆனது, சீன நாடு அருமண் உற்பத்தியில் சுமார் 61% மற்றும் அவற்றின் செயல்முறையாக்கத்தில் 92% பங்களிப்பதாக மதிப்பிடுகிறது.




## வரைவு பெருந்தொற்று ஒப்பந்தம் 2025

- மூன்று ஆண்டு காலப் பெரும் சர்ச்சைக்குரியப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, உலக சுகாதார அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஒரு "பெருந்தொற்று ஒப்பந்த" வரைவை ஒப்புக் கொண்டுள்ளன.
- இது உலகளாவியச் சமூகங்கள் சுகாதார நெருக்கடிகளை மிக சிறப்பான முறையில் தடுக்கவும் அதற்கு நடவடிக்கை எடுக்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- இது நோய்க் கிருமிகள் பற்றிய முக்கியத் தகவல்களையும், தடுப்பூசிகள் போன்ற சில நடவடிக்கைகளுக்கானத் தொழில்நுட்பத்தையும் உலகின் பிற பகுதிகளுடன் பகிர்ந்து

கொள்வதை வளமான நாடுகளுக்கான கடமையாக விதிக்கும்.

- அடுத்த மாதம் சட்டப் பூர்வமாக பிணைக்கப்பட உள்ள இந்த ஒப்பந்தத்தை உறுப்பினர் நாடுகள் ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## சூடானின் டூட்டி தீவு




- தொழில் முறை இராணுவ அதிகாரி அப்தெல் ஃபத்தா அல்-புர்ஹான் தலைமையிலான சூடானின் இராணுவம் ஆனது, டூட்டி தீவு உள்ளிட்ட கார்ட்டூம் பகுதிக் கட்டுப்பாட்டைக்

கோரியுள்ளது.

- இது அதன் நைல் நதி வேளாண் பகுதியை நோக்கி மக்களை ஈர்த்த சூடான் நாட்டுத் தலைநகரின் நடுவில் உள்ள ஒரு தீவு ஆகும்.
- இது புளூ மற்றும் ஒயிட் நைல் நதிகளின் சங்கமத்தில் அமைந்துள்ளது.
- சூடான் இராணுவத்திற்கும் அதன் துணை இராணுவ விரைவு ஆதரவுப் படைகளுக்கும் இடையே கடந்த இரண்டு ஆண்டுகளாக நடக்கும் போரினால் டூட்டி தீவானது கடும் பேரழிவிற்கு உள்ளாகியுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கண்ணாடி விரியன் பாம்புகளின் 'விஷம் குறித்த தகவல்'




- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தில் உள்ள அறிவியல் ஆராய்ச்சி நிபுணர்கள் உள்ளூர்ப் பருவநிலை சூழல்களைப் பயன்படுத்தி கண்ணாடி விரியன் பாம்புகளின் விஷம் குறித்தப் பண்புகளை நன்கு கணிக்க உதவுகின்ற "விஷம் குறித்த தகவல் வரைபடங்களை" உருவாக்கியுள்ளனர்.
- இக்கண்ணாடி விரியன் (டபோயா ரஸ்ஸெலி) இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் காணப் படுகிறது.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் பதிவாகும் 40 சதவீதத்திற்கும் அதிகமான பாம்புக் கடி தொடர்பான உயிரிழப்புகளுக்கு இது காரணமாகும்.
- இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இந்தப் பாம்பு கடித்தால் வெவ்வேறு வகையான அறிகுறிகள் ஏற்படுவதால் இதன் விஷம் மிகவும் மாறுபாடு கொண்டதாக உள்ளது.
- இந்தப் பாம்பு விஷத்தின் நச்சு விளைவுகள் வெவ்வேறு நொதிகளின் செறிவுகளால் ஏற்படுகின்றன என்பதோடு அவை இரை கிடைக்கும் ஒரு தன்மை மற்றும் பருவநிலை உட்பட பல காரணிகளால் தாக்கத்திற்கு உள்ளாகின்றன.

- இருப்பினும், கண்ணாடி விரியன் பாம்பின் விஷத்தில் மாறுபாட்டை ஏற்படுத்தும் சில காரணிகள் குறித்து இன்னும் தெரியவில்லை.

# மாநிலச் செய்திகள்

## இணைய வெளி மூலம் திரட்டப்படும் தொழிலாளர் நல நிதி வரி – கர்நாடகா




- கர்நாடக மாநில அமைச்சரவையானது, மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 2024 ஆம் ஆண்டு கர்நாடக மாநில இணைய தள அடிப்படையிலான இணையவெளி மூலம் திரட்டப் படும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நலன்) என்ற சட்ட மசோதாவினை அங்கீகரித்துள்ளது.
- இது தற்போது ஓர் அவசரச் சட்டமாக அறிமுகப் படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இது தற்போது நிறைவேற்றப்பட்டால் ராஜஸ்தானுக்கு அடுத்தபடியாக இணைய தளம் அடிப்படையிலான இணையவெளி மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களின் முக்கிய நலனுக்காக என்று சட்டத்தை அறிமுகப்படுத்தும் நாட்டின் இரண்டாவது மாநிலமாக கர்நாடகா மாறும்.
- மத்திய அரசானது, 2020 ஆம் ஆண்டில், இந்தியாவில் முதல் முறையாக இணையவெளி மூலம் திரட்டப்படும் வகை தொழிலாளர்களை வரையறுக்கும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தை (CoSS) நிறைவேற்றிய போதிலும், அது இன்னும் செயல்படுத்தப்படவில்லை.
- 2023 ஆம் ஆண்டில், இராஜஸ்தான் இணைய தள அடிப்படையிலான இணைய வெளி

மூலம் திரட்டப்படும் தொழிலாளர்கள் (பதிவு மற்றும் நலன்) சட்டத்தினை இயற்றியது.

- தெலுங்கானா மாநில அரசும் இணைய வெளி மூலம் திரட்டப்படும் தொழிலாளர்கள் சட்டத்தை இயற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## பனாரஸ் ஷெனாய் – புவி சார் குறியீடு

- பனாரஸ் ஷெஹ்னாய், பனாரஸ் தபேலா மற்றும் 'பனாரஸ் பர்வான் மிர்ச்' மற்றும் உத்தரப் பிரதேசத்தின் 20 பாரம்பரியத் தயாரிப்புகளுக்குப் புவி சார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- பனாரஸ் ஷெனாய் என்பது இந்தியச் செவ்வியல் இசையான பனாரஸ் கரானாவில் மிக ஆழமாக வேரூன்றிய ஒரு பாரம்பரியக் காற்று இசைக் கருவியாகும்.
- புராப் கரானா என்றும் அழைக்கப்படும் இப்பனாரஸ் தபேலா கரானா, வாரணாசியில் (பனாரஸ்) தோன்றிய ஒரு தனித்துவமான மற்றும் செல்வாக்குமிக்க தபேலா வாசிப்புப் பாணியைக் குறிக்கிறது.
- புவி சார் குறியீட்டுப் பட்டியலில் உத்தரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.




# இதரச் செய்திகள்

## துவாரகாவில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி

- பெரும் வண்டல் படிவுகள், தொல்பொருள் மற்றும் கடல்சார் படிவுகளின் அறிவியல் பகுப்பாய்வு மூலம் அங்கு மீட்கப்பட்டப் பொருட்களின் தொன்மையினைக் கண்டறிய இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது.
- முன்னதாக, துவாரகாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கோமதிக் கடற்கழியின் தெற்கில் இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் ஐந்து பேர் கொண்ட குழு ஆய்வு மேற்கொண்டது.
- முற்காலத்தில் கிருஷ்ணர் வாழ்ந்ததாக என்று நம்பப்படும் பெய்ட் துவாரகா, குஜராத் கடற்கரையில் உள்ள தீவு என்பதோடு அங்கு துவாரகாதீஷ் கோயில் அமைந்துள்ளது.
- இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையத்தின் கடலடி தொல்பொருள் ஆய்வுப் பிரிவு 2005

முதல் 2007 ஆம் ஆண்டு வரை துவாரகையில் முறைசார் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★